# என்று காண்போம்? தலைவா உன்னை!




எங்கே? எங்கே? எங்கே நீ?என
இதயம் விம்மித் துடிக்கின்றதே!
என்று காண்போம் இனிமேல் உன்னை?
எங்கள் நெஞ்சம் வெடிக்கின்றதே!
மங்காப் புகழின் மாபெரும் தலைவா!
மழலையும் கண்ணீர் வழிக்கின்றதே!
மறுநாள் விடியல் நீயில் லாமலா?
மனதில் பித்துப் பிடிக்கின்றதே!

சாயா தெழுந்த சரித்திர மே.உன்
சங்க நாதக் குரலெங்கே?
தாளும் கோலும் தேயத் தேயத்
தத்துவம் தீட்டிய விரலெங்கே?
ஓயா துழைத்த தலைவா! எங்கள்
உயிர்நீ சென்ற வழியெங்கே?
உயிரினும் மேலான உடன்பிறப் பே!என
ஒலிக்கும் அந்த மொழியெங்கே?

தூய கருப்புக் கண்ணா டிக்குள்
துளைக்கும் பார்வை ஒளியெங்கே?
தோள்கள் இரண்டும் சிலிர்க்க, மஞ்சள்
துண்டு தவழும் எழிலெங்கே?
தாயைப் போலும் நெஞ்சினில் அன்பு
ததும்பும் பாசப் பொழிவெங்கே?
தமிழால் முக்கனி விருந்து படைத்த
தலைவா! இலக்கியப் பிழிவெங்கே?

மேடை அனைத்தும் தேடு கின்றன!
வீரன் உன்முகம் பார்ப்பதற்கு!
மேவும் திசைகள் ஆவல் கொண்டன!
வெண்கலக் குரலைக் கேட்பதற்கு!
ஏடுகள் யாவும் வாடு கின்றன!
எழுத்தை அச்சில் கோப்பதற்கு!
ஏங்கு கின்றதே காலம்! உன்போல்
இன்னொரு மேதை வாய்ப்பதற்கு!



கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**

## கிராமப்புற மக்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை, ஆக.8-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், கீரமங்கலம் பேரூராட்சி மற்றும் அறந்தாங்கி ஒன்றியம் பகுதிகளில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்றப் பணிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 05.08.2023 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது. பின்னர் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற மக்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி இன்றையதினம் திருவரங்குளம் ஒன்றியம், கீரமங்கலம் பேரூராட்சி மற்றும் அறந்தாங்கி ஒன்றியம் பகுதிகளில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருவரங்குளம் ஒன்றியம், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், வெள்ளக் கொல்லை ஊராட்சியில், கிராமச்சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.3.13 கோடி மதிப்பீட்டில் அரையப்பட்டி முதல் வெள்ளக் கொல்லை செல்லும் சாலைப் பணி மற்றும் ரூ.3.88 கோடி மதிப்பீட்டில் கீழையூர் முதல் புதுக்காடு வழியாக வெள்ளக்கொல்லை செல்லும் சாலைப் பணி, திருக்கட்டளை ஊராட்சியில், ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் மேட்டுப்பட்டி அண்ணாநகர் சாலைப் பணி மற்றும் ரூ.9.50 லட்சம் மதிப்பீட்டில் அசோக்நகர் முதல் திருக்கட்டளை மேலக் கொல்லை சாலைப் பணி, வேப்பங்குடி ஊராட்சியில் ரூ.14.50 லட்சம் மதிப்பீட்டில் முசிறி சேதுபாவாசத்திரம் சாலையிலிருந்து வேப்பங்குடி பாரதியார் நகர் செல்லும் சாலைப் பணி ஆகிய சாலைப் பணிகள் மற்றும் திருக்கட்டளை ஊராட்சி யில், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி பணியும் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

கிரமங்கலம் பேரூராட்சியில் நபார்டு திட்டத்தின்கீழ் ரூ.60.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய கால்நடை மருந்தகக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதிகளில் உள்ள சுமார் 39,200 கால்நடைகள் வளர்ப்போர்கள் பயன்பெறுவர். தங்களது கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை முறையாக அளித்து, கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம். மேலும் அறந்தாங்கி ஒன்றியம், நெய்வத்தளி ஊராட்சியில் ரூ.17.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடம் மற்றும் ரூ.10.20 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கீரமங்கலம் பேரூராட்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், அறிவொளி நகர் பகுதியினைச் சேர்ந்த நரிக்குறவர் இன மக்களுக்கு 42 நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களையும், 111 நபர்களுக்கு பழங்குடியினர் ஜாதிச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. என அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

### ஆகஸ்ட் 18 முதல் 2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள

## ஒன்றிய, நகர, பேரூர்களில் வார்டுகள்தோறும் செயல்வீரர்கள் கூட்டம்!

### நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்

நாமக்கல், ஆக. 8-

ஆகஸ்ட் 18 முதல் 2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில்

ஒன்றிய, நகர, பேரூர்களில் வார்டுகள் தோறும் செயல்வீரர் கூட்டம் நடத்துவது என மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் தலைமையில் நடைபெற்ற நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது

நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு, வேலூர் ரோட்டில் உள்ள தளபதியார் அரங்கத்தில் மாவட்ட கழக அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார்.

கூட்டத்தில் ஒன்றிய கழக செயலாளர்கள் ஏ.பி ஆர்.சண்முகம், எம்.தங்கவேல், கே.செல்வராஜ், வட்டூர் ஜி.தங்கவேல், கு.பழனிவேல், கே.கே.சண்முகம், பி.பி.தனராசு, என்.நாச்சிமுத்து, ஏ.இளங்கோவன், , நகர கழக செயலாளர்கள் ஆர்.செல்வம், தா.கார்த்திகேயன், அ.குமார், எஸ். ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.கருணாநிதி, எம்.திருமலை, எம். ரமேஷ்பாபு, பி.முருகன், எஸ்.ராமமூர்த்தி, எம்.ராமலிங்கம், எஸ்.பி.கார்த்திராஜ், பி.முருகவேல்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.நடேசன், டி.ரங்கசாமி, ஓ.ஆர். செல்வராஜ், எம்.வெங்கடாசலம், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் வி.ஜி.அன்பழகன், கே. மயில்சாமி, எம்.சாந்தி, பொருளாளர் எம்.ராஜாராம், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.ஆர்.திருநாவுக்கரசு, A ஏ அ.ரவிச்சந்திரன், ஆர்.வேலுமணி, பி.பி. சாமிநாதன், பி.சிவக்குமார், எம்.இந்திராணி மயில்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுராசெந்தில் தலைமை கழகத்தில் அறிவிக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

இக்கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மற்றும் கிளை, வார்டு கழங்கங்கள் தோறும் உருவப்படம் வைத்து மரியாதை செலுத்திட வேண்டும், சமத்துவம் மற்றும் சமூகநீதி காத்திட்ட அறிஞர் அண்ணாவின் அறவழியில் உழைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினம் அன்று பரமத்திவேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் அமைதிப் பேரணி நடத்துவது, தலைமை கழக ஆலோசனைப்படி வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கழக ஆக்கப் பணிகளை வேகப்படுத்திட கிளை கழகங்கள் மற்றும் வார்டுகள் தோறும் வாக்குச்சாவடிகள் வாரியாக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்களுக்கான செயல்வீரர் கூட்டம் வருகின்ற ஆகஸ்ட் 18 ஆம் தேதி முதல் தொடர்ந்து அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் நடத்துவது, கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் இளைஞர் அணி சார்பாக 10 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களை ஒன்று திரட்டி 2 வது மாநில மாநாடு சேலத்தில் வருகின்ற டிசம்பர் மாதம் நடைபெற அனுமதி அளித்த கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவிப்பது,

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாவட்ட, ஒன்றிய ,நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அனைவரும் சமுக வலைதளங்களில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் தீவிரமாக கொண்டு சேர்க்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு.பெ. நீலகண்டன்
### ஆகஸ்ட் 8 (1999)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, இளமைக் காலம் முதல் கழகத்தில் உறுப்பினராகி, ஆழ்வார்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.**

**நான்கு முறை வட்டக் கழகச் செயலாளராகவும், வட்ட அவைத்தலைவர், மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்பு வகித்தவர்.**

**1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ஞாலமெலாம் நின்புகழே; நாளெலாம் நின்நினைவே!



ஆயிரம் ஆண்டுகள்
ஆனாலும் அய்யனே,
ஞாயிறு போல்ஒளி
நல்குவாய் மெய்யனே!
கோயிலும் கடவுளும்
கொடியவர் கூடாரம்
ஆயிடக் கூடாதென்று
அனலுரை எழுப்பியே
பாயிரம் தீட்டிய
பகுத்தறிவுப் பெரியாரின்
தீயினும் வெவ்விய
செஞ்சுடர்க் கதிரவனே!
தாயினும் பரிவுடன்
தாங்கிய அண்ணாவை
மேவிய தம்பியருள்
மேலான தம்பியே!
ஆவியாய் உடன்பிறப்பை
அணைத்திடும் தமையனே!
சேயினும் அன்பாகச்
செந்தமிழ் நாட்டினை
ஓயினும் ஓயாமல்
உயர்த்திய புரவலனே!
காயினும் பிறருன்னைக்
கனிவாகப் பொழிந்தவனே!
மாயினும் மாயாமல்
மக்களிடம் எழுந்தவனே!
தேயினும் தேயாத
செந்தமிழ்த் தலைவனே!

ஓயாமல் நாடெங்கும்
உரையாற்றிக் கருத்தூற்றிக்
காயாமல் வளர்த்தநற்
கனியான கழகத்தை
நீயாக விட்டுவிட்டு
நீளத்தான் துயில்வதற்குத்
தாயான அண்ணாவின்
சதுக்கத்தில் ஓரிடத்தே
பாயாத புலியாகப்
பாதுகாக்கப் போனாயோ?
நோவாத நெஞ்சுண்டா?
நொறுங்காத மனமுண்டா?
கூவாத நாவுண்டா?
கூடவரக் குரலுண்டா?

வாயாரப் பாடியே
வளரலைகள் தாலாட்டச்
சேயாக நீகேட்டுச்
சென்றாயோ தேடியே!
தீயான உன்னையொரு
சிறையிலே இட்டாலும்
மாயமாய் எங்கெங்கும்
மணம்பரப்பி விடுவாயே!

காயமே பொய்யென்று
கலக்கத்தைக்
கொள்ளாமல்
மாயமே வாழ்வென்று
மயக்கத்தில் குழம்பாமல்
ஆயவே, பகுத்தறிவு
தன்மான அறிவுலகின்
வாயிலைத் திறந்துவிட்டு
வாழ்வினைக் காட்டிய
தூயனே! கடலோரம்
துயில்கின்றாய் என்றுரைத்தால்
மாயந்தான் அதுவன்றோ?
மரணந்தான் உனக்குண்டோ!

அலைகடல் கரையோரம்
அண்ணா உறங்குவதால்
கலைக்கடலே! கழகமெனும்
கவிழாத கப்பலின்
தலைவனே! என்றுமே
தரைதட்டாது இயக்கிய
கலைஞரே! ஒருபோதும்
களைப்பினை அறியாமல்
நிலையாக உழைத்தவனே!
நிறைவேர்வை
உதிர்த்தவனே!
மலையாக உயர்ந்தவனே!
மாக்கடலாய் விரிந்தவனே!
வலையாக விரித்தாலும்
வஞ்சகத்தை அறிந்தவனே!

குலையாத வன்மையும்
குன்றாத கொள்கையும்
அலையாத நெஞ்சமும்
அடங்காத வீரமும்
மலையாத திட்பமும்
மயங்காத நுட்பமும்
கலையாத நெடுங்கனவும்
கலங்காத அறிவுளமும்
குலையாகக் கொண்டவனே!
கோலோச்சி வென்றவனே!

விலையாக உனைக்கொண்ட
விரிந்த ஒரு விண்ணுலகம்
இலையாக எப்பழுத்தான்
எங்களைவிட்டு
ஏகினையோ?
சிலையாக வழத்துன்னைத்
திக்கெல்லாம் வைத்தாலும்
உலையாகக் கொதிக்கிறதே
உனைக்காணா நெஞ்சங்கள்!
தலைகாட்ட மாட்டாயோ
தண்ணிலவாய்க்
கொஞ்சந்தான்!

பேராசிரியர்
மா.செல்வராசன்

அவ்விய நெஞ்சத்தார்
அழுக்காறு கொண்டிங்கே
ஒவ்வொரு சிக்கலும்
உருவாக்கும் போதெல்லாம்
செவ்விய உன்நினைவே
சிந்தையில் எழுகிறது!
கவ்விய புறாவினைக்
காத்த வண் மரபினனே!
எவ்விதம் தீர்ப்பாய்நீ
இலகுவாய் என்றெண்ணி
அவ்விதம் தீர்ப்பதே
அறிவுடைமை என்றியங்கித்
தெவ்வரை வீழ்த்திடும்
திறல்மிகு தளபதியின்
எவ்வொரு செயலிலும்
ஏகுவது உன்நினைவே
கொவ்வைபோல்
சிவந்திடும்:
கோலமாய்ச் சிறந்திடும்!

காலமெலாம் உழைத்ததனால்
களைப்படைந்தாய்
என்றிங்கே
ஓலமெலாம் எழுப்புதற்கு
ஒருவரும் முடியாதே!
நீலவான் நீர்காற்று
நெடும்புனல் சுடுங்கனல்
கோலநிலம் குற்றுடுக்கள்
குளிர்நிலா வளர்கதிர்
சாலவே இருக்குமட்டும்
சரித்திர நாயகனே!
மேலெழும் விண்ணெழும்
மேன்மேலும் விரிந்தெழும்
ஞாலமெலாம் நின்புகழே:
நாளெலாம் நின்நினைவே!